மனைப்பிரிவு மற்றும் மனை உட்பிரிவு குறித்து பெறப்படும் உத்தேசங்களில் நேராய்வு குறிப்பு இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவை நேராய்வு அறிக்கைக்காக தயாரிக்கப்பட்டு அமைந்திட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தவறான குறிப்புகள் எக்காரணம் கொண்டும் நேராய்வு அறிக்கையில் இடம் பெறாமல் பார்த்துக் கொண்டு கோப்பு முழு பொறுப்பை அன்னார் ஏற்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நேராய்வு அறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 1. | இடம் நேராய்வு செய்த அலுவலர் (பெயர், பதவி குறிப்பிடுக) | : | |
| 2. | இடம் நேராய்வு செய்த நாள் (நாளைக் குறிப்பிட்டு உடன்நேராய்வில் கொள்ள யாராவது அலுவலர் வந்திருப்பின் தெரிவிக்கவும் | : | |
| 3. | இடம் நேராய்வுக் குறிப்பு | : | |
| | அ) உத்தேசம் | : | இடம் அமையும் நில அளவு எண். பரப்பு, சாலை, தொகுதி விபரம். |
| | ஆ) அணுகுபாதை | : | உத்தேச இடத்தின் அணுகுபாதை, அகலம், தன்மை மற்றும் ஊராட்சியால் ஏற்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் சான்று |
| | இ) சுற்றுச் சார்பு | : | உத்தேச இடத்தினைச் சுற்றிலும் அமைந்துள்ள நில உபயோகம், அதன் சுற்றுச்சார்பு நில உபயோகம் மற்றும் சூழ்நிலைக்கேற்ப அமைந்துள்ளதா என்ற விபரம் |
| | ஈ) அமைப்பு | : | உத்தச இடம் மனைப்பிரிவு ஏற்றதா ? அதனில் நீர்பிடிப்பு, மேடு பள்ளம் உள்ளதா ? நிலத்தன்மை, எவ்வாறு என்றவிபரம். பாலம் தேவையா என்பது குறித்த விபரம் |
| | உ) மின்பாதை, தொலைபேசி பாதை | : | உத்தேச மனைப்பிரிவில் செல்லும் மின்பாதை விவரம் அது, கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட வேண்டும். KVA: LT Line, HT Line, Tower of Post. |
| | அ) பாதிப்பின்மை | : | உத்தேச இடத்தை சுற்றிலும் உள்ள விமான பாதை, ரயில் பாதை, சுடுகாடு, இடுகாடு போன்ற பாதிப்பு விபரம் |

| | | | |
|---|---|---|---|
| | ஏ) | : | உத்தேச இடத்தின் அருகில் ஒப்புதல் அளித்த மனைப்பிரிவு விவரங்கள் மற்றும் அதில் சாலைகள் ஒப்படைக்கப்பட்டதா என்ற விவரம் |
| | ஏ) பரிந்துரை | : | மொத்தத்தில் உத்தேச இடம் மனைப்பிரிவில் ஏற்றதா என்றும், நிபந்தனைகள் ஏதேனும் தேவையா, என்று மண்டல துணை இயக்குநர் உறுப்பினர் செயலரின் திட்டவட்ட பரிந்துரை. |

எனவே, அனைத்து மண்டல துணை, இணை இயக்குநர்களுக்கும், அனைத்து உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்களும், புதுநகர் திட்டக் குழும அதிகாரிகளும் நேராய்வு குறிப்பினை முறையாக இவ்வறிக்கையின்படி அனுப்பி வைத்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.